<u>அசல் வழக்கு எண்.14/2021</u>

<u>11.03.2026</u>

**பெயர் – கருப்பாத்தாள் க/பெ.காளியப்ப கவுண்டர்** (PW2)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள தகவல்கள் வாதி குருசாமி சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். குருசாமி என்பவர் கனகராஜ் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். குருசாமி போட்ட தடம் கனகராஜ் தனக்கும் பாத்தியம் உண்டு என்று கேட்டு அது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நானும், எனது தம்பி பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்லும் நிலத்தின் காலை எண் மற்றும் விஸ்தீர்ணம் தெரியாது.

(2) எனது தம்பி குருசாமி பூமியின் வடபுறம் கனகராஜ் வகையறா பூமி உள்ளது. எனது தம்பி பூமி கிழமேல் தார் ரோட்டை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். குருசாமி பூமி ஒட்டி வடபுறம் நாச்சிமுத்து பூமியும், அதை ஒட்டி வடபுறம் கனகராஜ் பூமியும் அதை ஒட்டி வடபுறம் கௌதமராஜ் பூமி உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் மூவரின் பூமிக்கு போவதற்கு தடம் குருசாமி பூமியின் மேற்கு புறம் உள்ளது என்றால் சரியல்ல. அதில் தடம் இல்லை. 1ம் பிரதிவாதி நாச்சிமுத்துவின் தகப்பனார் தேவண்ண கவுண்டர் என்றால் அவர் பெயர் தெரியாது. தேவண்ண கவுண்டரும், 2ம் பிரதிவாதி கனகராஜின் முன் பாத்தியஸ்தர் பெரியசாமியும் கூட்டாக 1974ம் ஆண்டு கிரையம் பெற்றார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. கிரையம் பெற்ற சமயத்தில் இருந்தே அவர்கள் குருசாமி பாகத்தின் மேல்கோட்டில் தான் சென்று வந்தார்கள் என்றும் அவர்கள் பூமிக்கு அது தான் தடம் என்றால் சரியல்ல.

(3) பிரதிவாதிகள் பூமிக்கு செல்வதற்கு வேறு தடம் இல்லை என்றால் சரியல்ல அவர்கள் பூமிக்கு கிழக்கே தார் ரோடு வரை அரண்மனையாருக்கு பாத்தியப்பட்ட சீலிங் பூமி உள்ளது. அது தற்போது காடாக உள்ளது. தடம் பிடிக்க யார் முயற்சி செய்தார்கள் என்றால் கனகராஜ் மற்றும் நாச்சிமுத்து வந்தார்கள் குருசாமி விடமாட்டேன் என்று சொன்னார். வாதி மற்றும் அவரது மகன் ராமகிருஷ்ணன் ஆகியோர் 2ம் பிரதிவாதியை தடத்தை உபயோகப்படுத்தக் கூடாது என்று சொல்லி தாக்கி அது சம்மந்தமாக குடிமங்கலம் காவல்

நிலையத்தில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவர்கள் தான் வந்து குருசாமியை அடித்து மண்டையை உடைத்துவிட்டார்கள். பிரதிவாதிகள் பூமிக்கு செல்வதற்கு குருசாமி பூமி வழியாக தான் செல்ல வேண்டும் என்றும், வேறு தடம் இல்லை என்றும், வாதி எனது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.03.11 14:47:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்